பார்த்துப் பிடித்திருக்கிறார். இவ்விவரம் அக்கல்லூரி முதல் வரும் தலைமைக் தேர்வு கண்காணிப்பாளருமான டாக்டர் முத்துராமன் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாணவர் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதி மறுக்கப்பட்டு வெளியில் அனுப்பப்பட்டிருக்கிறார். வெளியே சென்ற மாணவர் சிறிது நேரத்தில் வெளி ஆட்கள் (நண்பர்கள்) சிலரை உடன் அழைத்துக் கொண்டு வந்து அவர் காப்பி அடித்ததைக் கண்டு பிடித்துக் கொடுத்த ஆசிரியரைத் தாக்கியிருக்கிறார். இதனால் கொதிப்படைந்த ஆசிரியர்கள் முதல்வரிடம் இதனைத் தெரி வித்திருக்கிறார்கள். முதல்வர் இதன்மீது எடுத்த நடவடிக்கை அவர்களுக்கு உடன்பாடு இல்லாத நிலையில் சென்னைப் பல்கலைக்கழக பதிவாளரை அன்று மாலை அவருடைய அலு வலகத்தில் சந்தித்திருக்கிறார்கள். விவரம் அறிந்த பதிவாளர் உடனே தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

01. டாக்டர் எம். முத்துராமன் அவர்களை தலைமைத் தேர்வுக் கண்காணிப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு அதே கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் திரு. டி. பி. கோபாலன் என்பவரைத் தலைமைத் தேர்வுக் கண்காணிப்பாளராக செயல்படு மாறு செய்திருக்கிறார்.

02. சென்னை தியாகராயா கல்லூரியிலிருந்த ஆசிரியர் ஒருவரை கூடுதல் தலைமைத் தேர்வுக் கண்காணிப்பாளராக தொடர்ந்து பணியாற்ற ஏற்பாடு செய்துள்ளார்.

காப்பி அடித்த மாணவருடைய நடவடிக்கை குறித்து அறிக்கை பல்கலைக் கழக பதிவாளரால் கல்லூரியிலிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. அறிக்கை கிடைத்தவுடன் பல்கலைக் கழகத் தால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையில் காஞ்சீபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் தொடர்ந்து பல்கலைக் கழகத் தேர்வுகள் நடை பெறுவதற்குப் போதுமான பாதுகாப்பை காவல் துறை அளித்து வருகிறது. தேர்வுகளும் பிரச்சினை ஏதுமின்றி நடந்து வரு கின்றன.

ஆசிரியரைத் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவர் மீது போலீசில் புகார் (Criminal Complaint) கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

தாக்கப்பட்ட ஆசிரியரின் செயின் பறிக்கப்பட்டது பற்றி உறுதியான செய்தி ஏதுமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர் களே, அன்றைய தினம் தேர்வு நடைபெறுகின்ற சூழ்நிலையில் அங்கே மாணவர்கள் காப்பி அடித்து இருக்கின்றார்கள். அந்த